செய்தி வெளியீடு எண்:360 நாள் : 21.07.2015

# செய்தி வெளியீடு

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி **அம்மா** அவர்களின் ஆணையின்படி, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜு அவர்கள் தலைமையில் இன்று (21.7.2015) அம்மா மருந்தகங்கள் மற்றும் பண்ணை பசுமை நுகர்வோர் கடைகளின் செயல்பாடுகள் குறித்து ஆய்வுக் கூட்டம்

********

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் ஆணைக்கிணங்க, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் **செல்லூர் கே.ராஜு** அவர்கள் தலைமையில், இன்று (21.7.2015) தலைமைச் செயலகத்தில், **மாண்புமிகு அம்மா** அவர்களால் அறிவிக்கப்பட்டு கூட்டுறவுத்துறையின் மூலம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வரும் மக்கள் சேவை திட்டங்களான **அம்மா மருந்தகங்கள்** மற்றும் **பண்ணை பசுமை நுகர்வோர் கடைகளின்** செயல்பாடுகள் குறித்து கூட்டுறவுத்துறை உயர் அலுவலர்களுடன் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

**அம்மா மருந்தகங்களின்** விற்பனை குறியீடு, மருந்துகளின் இருப்பு, மருந்துகள் கொள்முதல், பொதுவான மென்பொருள் நிறுவுதல் மற்றும் **பண்ணை பசுமை நுகர்வோர் கடைகளுக்கு** மக்களிடையே உள்ள வரவேற்பு குறித்த விரிவான ஆய்வுக்குப் பின்னர் **அம்மா மருந்தகங்கள்** மற்றும் பண்ணை பசுமை நுகர்வோர் கடைகளின் செயல்பாடுகளை மேலும் மேம்படுத்துதல் தொடர்பான உயர் அலுவலர்களுடனான ஆலோசனையின்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதாவது.

**மாண்புமிகு அம்மா** அவர்கள் தொலைநோக்கு பார்வையுடன், அனைத்து தரப்பு மக்களும் குறைந்த விலையில் தரமான மருந்துகளை பெற்று பயனடையும் வகையில் **அம்மா மருந்தகங்கள்** திறக்கப்படும் என அறிவித்து 26.6.2014 அன்று **மாண்புமிகு அம்மா** அவர்களால் திறந்துவைக்கப்பட்ட **அம்மா மருந்தகங்களுடன்** தற்போது செயல்பட்டுவரும் 100 **அம்மா மருந்தகங்கள்** மற்றும் 195 கூட்டுறவு மருந்தகங்கள் வாயிலாக 15 சதவிகிதம் வரையிலான தள்ளுபடியில் தரமான மருந்துகள் பொதுமக்களுக்கு வழங்கி சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. அதன்படி தற்போது 14.7.2015 வரை ரூ.165.86 கோடிக்கு மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

அதேபோன்று, வெளிச்சந்தையில் காய்கறி விலையினை கட்டுப்படுத்தும் வகையிலும், ஏழை எளிய நடுத்தர மக்கள் தரமான காய்கறிகளை குறைந்த விலையில் பெற்று பயன்பெறும் வகையிலும், இடைத்தரகரின்றி விவசாயிகளையும், நுகர்வோர்களையும் இணைக்கக்கூடிய மக்கள் சேவை திட்டமாக

**பண்ணை பசுமை நுகர்வோர் கடைகளை மாண்புமிகு அம்மா** அவர்கள் 20.6.2013 அன்று துவங்கி வைத்தார்கள். தற்போது 2 நடமாடும் **பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள்** உட்பட தமிழகத்தில் மொத்தம் 58 கடைகள் மூலம் சந்தை விலையைவிட குறைந்த விலையில் தரமான காய்கறிகளை விற்பனை செய்து சிறப்பாக மக்கள்சேவையாற்றி வருகின்றன. இக்கடைகள் மூலம் 16.7.2015 வரை 96,26,401 கிலோ காய்கறிகள் ரூ.27.58 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள **பண்ணை பசுமை நுகர்வோர் கடை** மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள **அம்மா மருந்தகம்** ஆகியவை தினமும் தலா ரூ.1.50 இலட்சம் அளவிற்கு விற்பனை செய்து வருகின்றன. தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள **பண்ணை பசுமை நுகர்வோர் கடையின்** மூலம் தினமும் சராசரியாக 800 வாடிக்கையாளர்களுக்கும், திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அம்மா மருந்தகம் மூலம் சராசரியாக தினமும் 400 வாடிக்கையாளர்களுக்கும் இலாபநோக்கின்றி மக்கள் சேவையாற்றிவருவது பாராட்டுக்குரியது. அக்கடைகளின் விற்பனையை இலக்காக கொண்டு தமிழகத்தில் அனைத்து **அம்மா மருந்தகங்கள்** மற்றும் பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் சிறப்பாக மக்கள் சேவையாற்றிட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

அனைத்து **அம்மா மருந்தகங்களிலும்** மக்களின் தேவைக்கு ஏற்ப அனைத்து மருந்துகளையும் கொள்முதல் செய்து தடையின்றி மக்களுக்கு வழங்கவும், அனைத்து **பண்ணை பசுமை நுகர்வோர் கடைகளிலும்** மக்களின் தேவைக்கு ஏற்ப காய்கறிகளை கொள்முதல் செய்து வினியோகிக்கவும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இத்திட்டங்களை சிறப்பாக மேற்கொள்வது தொடர்பாக மக்களின் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் பெற்றிடும் வகையில் அனைத்து **பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள்** மற்றும் **அம்மா மருந்தகங்களில்** ஆலோசனைப் பெட்டிகள் வைக்கவேண்டும். மக்கள் சேவை திட்டங்களாக செயல்பட்டு வரும் இத்திட்டங்களை எவ்வித புகார்களுக்கும் இடம் அளிக்காமல் சிறப்பாக செயல்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்தில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மைச் செயலாளர் திரு.சிவ்தாஸ் மீனா, இ.ஆ.ப., கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திருமதி ஜெயஸ்ரீமுரளிதரன், இ.ஆ.ப., கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர் திரு.த.ஆனந்த்,இ.ஆ.ப., மற்றும் கூட்டுறவுத்துறை உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**